# இளையோர்களுக்கான கோவிட்-19 தடுப்பூசிகள் ஒப்புதல் உடன்படிக்கை

Vaccinate WA
CovidVaccineWA.org

கோவிட்-19 தடுப்பூசிகள் இப்போது 5 முதல் 17 வயதுள்ள இளையோர்களுக்குக் கிடைக்கின்றன. பல வழங்குநர்களுக்கு, 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஒப்புதல் தேவை. இருப்பினும், நீங்கள் 18 வயதிற்குட்பட்டவராகவும், பெற்றோரை சார்ந்திராத சுயாதீனமானவராக இருந்தால், சில சமயங்களில் நீங்களே உங்களுக்கு ஒப்புதல் வழங்கிக் கொள்ளலாம் அல்லது நீங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் அல்லாமல், நிலையற்ற வசிப்பிடவசதி கொண்டவராக இருந்தால், உங்கள் பள்ளியின் மூலம் ஒப்புதல் பெறலாம்.. உங்களுக்குச் சேவை செய்யக்கூடிய வழங்குநரைக் கண்டறிவது மற்றும் தடுப்பூசி முன்பதிவிற்கு உங்களை நீங்கள் எவ்வாறு தயார் செய்து கொள்வது போன்ற மாகாண சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பல்வேறு வகையான ஒப்புதல்களை இந்த ஆவணம் காட்டுகிறது.

## உங்களுக்காக ஒப்புதல் வழங்கக்கூடிய பெரியவர்கள்:



- பெற்றோர்
- பாதுகாவலர் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலர்
- வீட்டிலிருந்து விலகி வசிக்கும் குழந்தைக்கான மருத்துவ பராமரிப்பை அளிக்கும் ஒரு வளர்ப்பு பெற்றோர் அல்லது ஒப்புதல் அளிக்க நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற நபர் (அத்தியாயம் 13.32A அல்லது 13.34 Revised Code of Washington (RCW, வாஷிங்டன் மறுசீரமைக்கப்பட்ட குறியீடு))
- உங்களுக்கான உடல்நலம் சார்ந்த முடிவுகளை எடுக்க கையொப்ப அங்கீகாரம் பெற்ற ஒரு நபர்
- உங்களின் உடல்நலப் பராமரிப்பு பொறுப்பை நிர்வகிக்கும் உறவினர்
- பள்ளி செவிலியர், ஆலோசகர் அல்லது வீடற்றவரின் தொடர்பாளர் (McKinney-Vento Homeless Education Act இன் கீழ் நீங்கள் வீடற்றவர் என வரையறுக்கப்பட்டு இருந்தால்)*

## பின்வரும் சூழ்நிலைகளில் நீங்களே உங்களுக்கான ஒப்புதலை அளிக்கலாம்:



- **நீங்கள் சட்டப்பூர்வமாக சுயாதீனமாக வாழ்பவர்.** நீங்கள் 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர் மற்றும் உங்கள் பெற்றோரிடமிருந்து சட்டப்பூர்வமாக பிரிந்து சுயாதீனமாக வாழ்பவர்.
- **நீங்கள் ஒரு சுயாதீனமான சிறார் அல்லது வயது வந்தவரை திருமணம் செய்து கொண்டவர்.**
- **வழங்குநர் உங்களை ஒரு முதிர்ச்சியுற்ற சிறார் என்று** Mature Minor Doctrine (முதிர்ச்சியுற்ற சிறார் கொள்கை) இன் கீழ் தீர்மானிக்கிறார்.**

### *McKinney-Vento இன் மூலம் ஒப்புதல் பற்றிய கூடுதல் தகவல்கள்:

மாகாணச் சட்டத்தின் கீழ், பள்ளி செவிலியர்கள், பள்ளி ஆலோசகர்கள் மற்றும் வீடற்ற மாணவர்களின் தொடர்பாளர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பாதுகாப்பில் இல்லாத வீடற்றவர்களுக்கு இளையோர்கள் அல்லது வயது வந்தவர்களுக்கான (ஃபெடரல் McKinney-Vento homeless education act இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது - ஆங்கிலத்தில் மட்டும்) தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் அளிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**ஆதாரவளத்திற்கான இணைப்பு:** National Center for Homeless Education, *வீடற்ற நிலையில் உள்ள ஆதரவற்ற மாணவர்களின் கல்வியை ஆதரித்தல்,* https://nche.ed.gov/wp-content/uploads/2018/10/youth.pdf - ஆங்கிலத்தில் மட்டும்

### **Mature Minor Doctrine பற்றிய கூடுதல் தகவல்கள்:

மருத்துவச் செயல்முறையின் விளைவுகளைப் புரிந்துகொண்ட அல்லது மதிப்பறிந்து கொண்ட சிறார்களுக்கு,"Mature Minor Doctrine" கீழ் சரியான ஒப்புதல் அளிக்க சில வழங்குநர்கள் அனுமதிக்கின்றனர்.

நோயாளி முதிர்ச்சியுற்ற சிறாரா என்பதைத் தீர்மானிப்பதில், வழங்குநர்கள் சிறாரின் வயது, புத்திசாலித்தனம், முதிர்ச்சி, பயிற்சி, அனுபவம், பொருளாதார சுதந்திரம் அல்லது அதன் குறைபாடு, வயது வந்தோருக்கான பொதுவான நடத்தை மற்றும் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடுதல் ஆகியவற்றை மதிப்பீடு செய்வார்கள்.

## வெவ்வேறு வழிகளில் ஒப்புதலை வழங்குநர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

- வாய்மொழி ஒப்புதல் (தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக)
- எழுத்துப்பூர்வ ஒப்புதல் (ஒரு படிவம்)
- சிலருக்கு எழுத்துப்பூர்வ மற்றும் வாய்மொழி ஒப்புதல் என இரண்டுமே தேவைப்படுகிறது.
- வயது வந்தவரின் நேரடியான ஒப்புதல் உங்களுக்கான ஒப்புதலை அளிக்கிறது.

## தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கான உதவிக்குறிப்புகள்

- ▫ Vaccine Locator **(தடுப்பூசி இருப்பிடக் கண்டருவி)** (https://vaccinelocator.doh.wa.gov/?language=ta) **இல் உள்ள வடிகட்டுதல் விருப்பங்களைப் பயன்படுத்தவும் அல்லது எந்த வகையான ஒப்புதலை வழங்குநர் ஏற்றுக்கொள்கிறார் என்பதை தெரிந்து கொள்வதற்கு வழங்குநரை அழைக்கவும்.** தடுப்பூசி இருப்பிடக் கண்டருவி இல் உள்ள இளையோர்களுக்கான உகந்த வடிகட்டுதல் விருப்பங்கள்உங்கள் சூழ்நிலைக்குப் பொருத்தமான ஒரு வழங்குநரைக் கண்டறிய உதவும். உதாரணமாக, உங்களுக்காக ஒப்புதல் அளிக்கக் கூடிய வயது வந்தவர் இருந்தும், தடுப்பூசி போட்டுக்கொள்ளும் போது அவரால் உங்களுடன் வர இயலவில்லை எனில் எழுத்துப்பூர்வ ஒப்புதலை ஏற்கும் வழங்குநரைக் கண்டறியவும்.
- ▫ ஆன்லைனில் படிவத்தை நிரப்ப உங்களுக்குப் பெற்றோர்/பாதுகாவலர் இல்லையென்றால், **நேரடியான அனுமதிகளை ஏற்கும் தடுப்பூசி மையங்களைத் தேடவும் அல்லது தடுப்பூசி முன்பதிவுகளுக்கு தொலைபேசியில் அழைக்கவும்.** ஆன்லைன் முன்பதிவு செய்வதற்காக பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்புதல் படிவத்தை நிரப்புமாறு பல வழங்குநர்கள் கேட்கிறார்கள்.
- ▫ **உங்கள் பள்ளியிடம் சரிபார்க்கவும்.** நீங்கள் நிலையற்ற வசிப்பிடவசதி கொண்டவராக இருந்தால், McKinney-Vento உங்களுக்குப் பொருந்தும். (மேலும் தகவல்களுக்கு முன் பக்கத்தைப் பார்க்கவும்.) ஒப்புதலைப் பெறுவதற்காக நீங்கள் பள்ளி செவிலியர், பள்ளி ஆலோசகர் அல்லது வீடற்ற மாணவர் தொடர்பாளர்கள் ஆகியோருடன் இணைந்து பணியாற்றலாம்.
- ▫ **நீங்கள் வழங்க வேண்டிய ஒப்புதலின் வகைக்குத் தயாராகுங்கள்:**
  - ▫ நீங்கள் தடுப்பூசி எடுத்துக் கொள்ளும்போது ஒரு வயது வந்தவர் அங்கு இருக்க வேண்டும் எனும் பட்சத்தில், அவர்களை ஒருங்கிணைக்கவும்.
  - ▫ எழுத்துப்பூர்வ ஒப்புதலை வழங்குநர் ஏற்றுக்கொண்டால், உங்களுக்காக ஒப்புதல் அளிக்கும் நபரால் படிவத்தை அச்சிட்டு கையொப்பமிட முடியுமா என்பதைப் பார்க்கவும்.
  - ▫ நீங்கள் சுயாதீனமாக வாழும் சிறார் அல்லது ஒரு வயதுவந்த அல்லது சுயாதீனமாக வாழும் சிறாரை திருமணம் செய்து கொண்ட சிறாராக இருக்கும் பட்சத்தில் தகுந்த ஆவணங்களை நீங்கள் கொண்டு வர வேண்டும்.
  - ▫ நீங்கள் McKinney-Vento இன் மூலம் ஒப்புதல் பெறுகிறீர்கள் மற்றும் வழங்குநர்களுக்கு இது குறித்து சந்தேகங்கள் இருக்கக்கூடும் என்று கவலையயுற்றால் தகவலறிந்த ஒப்புதல் சட்டத்தின் நகலை நீங்கள் கொண்டு வரலாம்: RCW 7.70.065 - ஆங்கிலத்தில் மட்டும் மற்றும் பள்ளிகளுக்கு உரிய பகுதியை முன்னிலைப்படுத்தவும். (சட்டத்திற்கான இணைப்பு: https://app.leg.wa.gov/RCW/default.aspx?cite=7.70.065 - ஆங்கிலத்தில் மட்டும்). குறிப்பு: இது தேவையானது அல்ல.
  - ▫ Mature Minor Doctrine மூலம் நீங்கள் ஒப்புதல் அளிக்க விரும்பினால், நீங்கள் பெற்றோரிடமிருந்து விடுபட்டு சுயாதீனமாக இருப்பதை நிறுவும் ஆவணங்கள் மற்றும் தகவல்களை சமர்ப்பிக்க வேண்டிய தேவை இருக்கும். இது அனைத்து வழங்குநர்களுக்கும் தேவையில்லை, ஆனால் உதவக்கூடும். சில வழங்குநர்கள் முதிர்ச்சியுற்றவரா அல்லது சிறாரா எனும் தீர்மானங்களை தளத்தில் முடிவெடுப்பதில்லை ஆனால் முந்தைய வழங்குநர்களின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்கிறார்கள்.

Washington State Department of Health

DOH 825-018 December 2021 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோர, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.govக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.